சுருக்கம்

பள்ளிக் கல்வி-ஆசிரியர் பொது மாறுதல்-2009-2010ஆம் கல்வி ஆண்டில் கடைபிடிக்கப்பட வேண்டிய நெறிமுறைகள் குறித்து ஆணை வெளியிடப்பட்டது- ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு தொடக்கக் கல்வித் துறையில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்கள் பள்ளிக் கல்வித்துறைக்கு அலகு விட்டு அலகு மாறுதல் பெற்றுச் செல்ல அனுமதி அளிக்கவும் அதன்பின் ஏற்படும் காலிப் பணியிடங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நியமனம் செய்யவும் -ஆணை வெளியிடப்படுகிறது..

---

பள்ளிக்கல்வி(இ1)துறை

**அரசாணை(நிலை)எண். 120**
**நாள். 3 .6. 2009**

திருவள்ளுவராண்டு 2040, வைகாசி 20

படிக்கப்பட்டவை

1 அரசாணை (1டி) எண்.148, பள்ளிக்கல்வித் (இ1)துறை, நாள் 21.4.2008
2. அரசாணை (1டி) எண்.145, பள்ளிக்கல்வித் (இ1)துறை, நாள் 15.4.2009
3. தொடக்கக் கல்வி இயக்குநரின் ந.க.எண்.9555/டி1/09, நாள் 19.5.2009.

------

**ஆணை**

மேலே 3இல் படிக்கப்பட்ட தொடக்கக் கல்வி இயக்குநரின் கடிதத்தில் தொடக்கக் கல்வித்துறையில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்கள் பள்ளிக் கல்வித்துறைக்கு அலகு விட்டு அலகு மாறுதல் பெற்றுச் செல்லவும் இதனால் ஏற்படும் காலிப்பணியிடங்களை ஆசிரியர் தேர்வுவாரியம் மூலம் நியமனம் செய்யவும் அரசின் அனுமதி கோரியுள்ளார்.

2. தொடக்கக் கல்வி இயக்குநர் தனது கடிதத்தில் அரசு ஆணை (1டி) எண்.148, பள்ளிக்கல்வி (இ1) துறை, நாள் 21.4.2008 மற்றும் அரசு ஆணை (1டி) எண். 145,பள்ளிக்கல்வித் (இ1) துறை, நாள் 15.4.2009ல் வெளியிடப்பட்டுள்ள பொது மாறுதல்களுக்கான நெறிமுறைகளில் தொடக்கக் கல்வித்துறையை பொறுத்தவரையில் மாறுதல் கோரும் ஆசிரியர்களின் விண்ணப்பத்தினை மாவட்டத்திற்குள், ஒன்றியம்விட்டு ஒன்றியம் அல்லது மற்ற அலகுகளுக்கு பரிசீலிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த ஆண்டு இதன் அடிப்படையில் தொடக்கக் கல்வி துறையின் கீழ் ஆசிரியர் தேர்வுவாரியம் மூலம் நியமனம் பெற்ற ஆசிரியர்களில் பள்ளிக் கல்வித்துறைக்கு மாறுதல் கோரி பெறப்பட்ட சுமார் 3000 அலகுவிட்டு அலகு மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் பள்ளிக்கல்வித்துறைக்கு அனுப்பப்பட்டதில் மாறுதல் ஆணை எவருக்கும் அளிக்கப்படவில்லை என்றும் ஆசிரியர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு தொடக்கக் கல்வித்துறையில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்கள் பள்ளிக் கல்வித்துறைக்கு மாறுதல் பெற்றுச் செல்ல ஏதுவாக அலகுவிட்டு அலகு மாறுதல் வழங்குவதற்கான கோரிக்கை வரப்பெற்றுள்ளதாகவும் தொடக்கக்கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், இக்கல்வியாண்டில் தொடக்கக் கல்வித் துறையிலிருந்து ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் பள்ளிக் கல்வித் துறைக்கு அலகுவிட்டு அலகு மாறுதல் கோரி சுமார் 3000க்கும் அதிகமான பட்டதாரி ஆசிரியர்களின் மாறுதல் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் இவ்விண்ணப்பங்கள் சார்பாக உரிய நடவடிக்கை எடுக்கும்பொருட்டு, பள்ளிக் கல்வித் துறைக்கு அலகு விட்டு அலகு மாறுதலில் செல்ல தடையின்மைச்சான்று அளிக்க அனுமதியும், பள்ளிக் கல்வி இயக்குநர் இவ்விண்ணப்பங்கள்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரை வழங்குமாறும் இதனால் மாறுதல் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களின் காலிப்பணியிட எண்ணிக்கைக்கு ஏற்ப இவ்வாண்டு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நியமனம் செய்யப்பட இருக்கும் ஆசிரியர்களில் தொடக்கக் கல்வித்துறைக்கு அதிக அளவில் ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்யுமாறு ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு ஆணை வழங்குமாறும் தொடக்கக் கல்வி இயக்குநர் அரசை கோரியுள்ளார்.

4. மேற்காண் தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு ஆய்வு செய்து இக்கல்வியாண்டில் தொடக்கக் கல்வித் துறையிலிருந்து ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் பள்ளிக் கல்வித் துறைக்கு அலகுவிட்டு அலகு மாறுதல் கோரி சுமார் 3000க்கும் அதிகமான பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள மாறுதல் விண்ணப்பங்கள் சார்பாக உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, பள்ளிக்கல்வி துறைக்கு அலகுவிட்டு அலகு மாறுதல் செல்ல தடையின்மை சான்று அளிக்க தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. பள்ளிக்கல்வி இயக்குநர் இவ்விண்ணப்பங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகிறார். இவ்வாறு மாறுதல் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களின் காலிப்பணியிட எண்ணிக்கைக்கு ஏற்ப இவ்வாண்டு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நியமனம் செய்யப்பட இருக்கும் ஆசிரியர்களில் தொடக்கக் கல்விக்கு அதிக அளவில் ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்யுமாறு ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.குற்றாலிங்கம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6
ஆசிரியர் தேர்வு வாரியம்,சென்னை-6
மாண்புமிகு பள்ளிக்கல்வி அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை-9
முதன்மைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை-9
பள்ளிக்கல்வி (ஜி) துறை, சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.